ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2123/74 - 2019 මැයි මස 17 වැනි සිකුරාදා - 2019.05.17
*2123/74 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

***2019 ஆம் ஆண்டின் ..... ஆம் இலக்க உள்ளூராட்சி தாபனங்களது செயற்பாடுகளை நிர்வகிக்கும் நியதிச்சட்டம்***

2019 ஆம் ஆண்டின் ..... ஆம் இலக்க உள்ளூராட்சி தாபனங்களது செயற்பாடுகளை நிர்வகிக்கும் நியதிச்சட்டம், விபரிக்கப்படும் நியதிச் சட்ட வரைபிற்கான மேல் மாகாண அமைச்சரவையின் அங்கீகாரம் 2018.08.13 ஆந் திகதியிட்ட அமைச்சரவைத் தீர்மான இலக்கம் VI/130/08-2018-02(i) இன் மூலம் கிடைக்கப்பெற்றுள்ளதெனவும் அது மேல் மாகாண மாகாண சபையின் அங்கீகாரத்திற்காக என்னால் முன்மொழியப்படவுள்ளதெனவும் பொது மக்களுக்கு தெரியப்படுத்துவதற்காக, இத்தால் அறிவிக்கின்றேன்.

இசுர தேவப்பிரிய,
மேல் மாகாணத்தின் மாகாண சபையின் முதல் அமைச்சர் மற்றும்
உள்ளூராட்சி, பொருளாதார ஊக்குவிப்பு, மின்சாரம் மற்றும்
எரிசக்தி சக்தி, சுற்றாடல் அலுவல்கள், நீர் வடிகாலமைப்பு மற்றும்
நீர் விநியோகம் மற்றும் சுற்றுலா அலுவல்கள் தொடர்பான அமைச்சர்.

2019, ஏப்பிறல் 18.

1A - PG 4523 — 20 (2019/05)
இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**மேல் மாகாண மாகாண சபையின் 2019 ஆம் ஆண்டின் ..... ஆம் இலக்க உள்ளூராட்சித் தாபனங்களது செயற்பாடுகளை நிர்வகிக்கும் நியதிச் சட்டம்**

மேல் மாகாண உள்ளூராட்சித் தாபனங்களது பணிகள் மற்றும் தொழிற்பாடுகளுக்குரிய நடவடிக்கைகளை நிர்வகித்தல் மற்றும் மேற்பார்வை செய்வதற்காகவும் அது தொடர்பான தகவல்கள் மற்றும் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளுதல் உட்பட அது தொடர்பான விடயங்களுக்கான ஏற்பாடுகளை வழங்குவதற்கான நியதிச் சட்டமாகும்.

இந்நிதியச் சட்டம் மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 278 ஆம் பிரிவிற்கும், நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 197 ஆம் பிரிவிற்கும் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 196 ஆம் பிரிவிற்கும் இசைந்ததாகும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மேல் மாகாண மாகாண சபையினால் இவ்வாறு இயற்றப்படுகிறது.

குறுந் தலைப்பும் நடைமுறைக்கு வரும் திகதியும்.

1. இந்நியதிச் சட்டமானது மேல் மாகாண மாகாண சபையின் 2019 ஆம் ஆண்டின் ... ஆம் இலக்க "உள்ளூராட்சித் தாபனங்களது செயற்பாடுகளை நிர்வகிக்கும் நியதிச் சட்டம்" என அறியப்படுவதோடு மேல் மாகாண ஆளுநரினால் அங்கீகரிக்கப்படும் தினத்திலிருந்து செயற்படும்.

நியதிச் சட்டத்தின் நோக்கம்.

2. உள்ளூராட்சித் தாபனமொன்றின் தத்துவங்களை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக அல்லது அதன் நிர்வாகம் தொடர்பாக உள்ளூராட்சித் தாபனத்தின் பொறுப்பிலிருக்கும் ஆவணம் அல்லது புத்தகம் சபையின் கட்டளையின்படி மேற்கொள்ளப்படும். மேற்கொள்ளப்பட்ட ஏதாவதொரு பணி அல்லது அதனுடன் தொடர்புடைய ஆவணம் அல்லது கோப்பு சபையின் அல்லது சபையினால் நியமிக்கப்பட்ட குழுவின், செயற்குழுவின் அறிக்கை, உள்ளூராட்சித் தாபனமொன்றின் நிதியத்திற்குரிய வருமானம், செலவு தொடர்பான தகவலொன்று அல்லது அவ்வாறான ஆவணங்களது பிரதியொன்று அல்லது உள்ளூராட்சித் தாபனமொன்றின் நிர்வாகத்தின் கீழுள்ள சொத்தொன்று தொடர்பான தகவலொன்றை அது தொடர்பான விசாரணை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள விசாரணை அலுவலரொருவர் அல்லது அமைச்சரினால் அல்லது ஆணையாளரினால் அதற்காக நிர்ணயிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட ஏதாவதொரு அலுவலர் உள்ளூராட்சித் தாபன நிர்வாக அலுவலரிடம் அல்லது அதற்காக அதிகாரமளிக்கப்பட்டுள்ள வேறு ஏதாவதொரு அலுவலரிடம் கோருதல், பரிசீலனை செய்வதற்காக பொறுப்பில் கொள்ளல் இயலும்.

தத்துவம் மற்றும் அதிகாரம்.

3. ஆணையாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட விசாரணை அலுவலரொருவருக்கு உள்ளூராட்சித் தாபனமொன்றிற்குள் அல்லது அதன் கீழ் நிர்வகிக்கப்படும் எந்தவொரு வளாகத்தினுள்ளும் மேல் 2 ஆம் பிரிவின் கீழான பரிசீலனை நடவடிக்கைக்காக உள்நுழைவதற்கான தத்துவம் மற்றும் அதிகாரம் இருத்தல் அவசியம்.

4. மேலே பிரிவின் கீழ் ஆவணமொன்றை, கோப்பொன்றை, புத்தகமொன்றை அல்லது வேறு தகவலொன்றைக் கோருமிடத்து அத்தகவலை வழங்குவதை வேண்டுமென்றே புறக்கணித்தல் அல்லது அதற்குத் தடையேற்படுத்துதல் குற்றமாவதுடன் அக்குற்றத்திற்காக நீதவான் நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாக்கப்பட்ட பின்னர் ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்படாத தண்டமொன்றிற்கு உட்படுதல் அவசியம்.

பொருள் கொள்ளல்.

5. பதங்கள் தொடர்பாக வேறு பொருள் கொள்ளல் தேவைப்பட்டாலன்றி, இந்நியதிச் சட்டத்தில் :-

"அமைச்சர்" என்பது, மேல் மாகாண விடயப் பொறுப்பு அமைச்சர் எனவும்,

"உள்ளூராட்சித் தாபனம்" என்பது, மேல் மாகாண மாநகர சபை, நகர சபை மற்றும் பிரதேச சபை எனவும்,

"உள்ளூராட்சி ஆணையாளர்" என்பது, மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எனவும்,

"விசாரணை அலுவலர்" என்பது, மேல் மாகாண மாகாண அரச சேவையில் பதவியொன்றை வகிக்கும் மேல் மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்ட சிரேட்ட விசாரணை அலுவலர் அல்லது விசாரணை அலுவலர் எனவும் கருதப்படும்.

6. இந்நியதிச் சட்டத்தின் சிங்கள மற்றும் தமிழ் மொழிகளுக்கிடையில் முரண்பாடுகள் ஏற்படின் சிங்கள மொழி வலுப்பெறுவதாக இருக்கும்.

05-908

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.